மேற்கோள் நூல்

எடுத்துவருகிறது. அதன்படி என்னுடைய தொகுதியான கரூரில் இது போன்ற சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீரை பொது சுத்திகரிப்பு தொழிற்சாலை ஏற்படுத்தி சுத்தப்படுத்துவதற்காக வருகின்ற 6-11-1994-ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் நானே அந்த தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்ட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு க. அர்ச்சுனன். மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

13—

முதியோர் இல்லங்கள் மாவட்டந்தோறும் அமைத்தல்.

33235*—திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெற்ற பிள்ளைகள், பெண்களால் கவனிக்கப்படாத முதியோர்களைப் பராமரிக்க பாதுகாப்பு இல்லங்கள் மாவட்டந்தோறும் அமைக்கப்படுமா?

(ஆ) இதில் வசதி படைத்தவர்களுக்கென கட்டண அடிப்படையில் தனியாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர்களைப் பராமரிப்பதற்காக தற்போது தமிழக அரசு பின்பற்றி வருகின்ற இந்தத் திட்டத்திற்கு—நல்ல திட்டத்திற்கு—மத்திய அரசு உதவுகிறது. அது எந்த அளவுக்கு உதவி வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1994 நவம்பர் 4

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 9 மாவட்டங்களில் இந்த முதியோர் இல்லங்கள் அரசால் அமைக்கப்பட்டிருக்கின்றன. மீதி உள்ளவைகள் அனைத்து மாவட்டங்களிலும் தொண்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதற்கு மத்திய அரசு ஏற்கெனவே 50 சதவிகிதம் நிலத்தின் மதிப்பு, 75 சதவிகிதம் கட்டடத்தின் மதிப்பு என்று பணம் கொடுத்து வந்தது. இந்த ஆண்டு முதல் அதை அவர்கள் நிறுத்திவிட்டார்கள். ஆனாலும் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசினர் நிறுத்தினாலும் அதனால் முதியவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்கின்ற நல்லெண்ணத்தோடு, தாயுள்ளம் கொண்ட கண்ணோட்டத்தோடு, இரக்கக் கண்ணோட்டத்தோடு அந்த மானியத்தை மாநில அரசே வழங்கும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலுள்ள சில வயதானவர்களுக்கு முதியோர் உதவித்தொகை வாங்கித் தரலாம் என்றாலும் கூட, பெற்ற பிள்ளைகள் விட்டுவிட்டு போய்விடுகின்ற காரணத்தினால் கஷ்டப்படுகிறார்கள். பிள்ளைகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த காரணத்தைச் சொல்லி அவர்களுக்கு முதியோர் தொகையையும், உதவித்தொகையையும் வாங்கித் தரமுடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு அந்த கடைசி காலத்திலே, அந்திய காலத்திலே வாழ வழியில்லாதவர்களுக்கு, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே இப்போது இருக்கின்ற இந்தத் திட்டத்தை இன்னும் விரிவுபடுத்துவதற்காக மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தி, அதிக நிதி உதவியைப் பெற்று மாவட்டத்திற்கு ஒன்று என்பதை இன்னும் விஸ்தரித்து அதிகப்படியான நபர்களை சேர்த்து அவர்களைப் பராமரிப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை வலியுறுத்தி பெறுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று உறுப்பினர் குறிப்பிட்டார். மத்திய அரசு இந்த ஆண்டு முதல் நிறுத்திவிட்டதால், அந்தத் தொகையையும் சேர்த்து மாநில அரசே ஒவ்வொரு மாவட்டத்திலும் இதை ஏற்படுத்தி, இதற்கு ஒரு லட்சம் ருபாய் மானியம் வழங்கவேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் 40 பேர்கள் சேர்க்கப்படுவார்கள். அப்படி எல்லா முதியோர் இல்லங்களும்

1994 நவம்பர் 4]

இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. தொண்டு நிறுவனங்கள், ஏதாவது ஒரு மாவட்டத்திலே இன்னும் கூடுதலாக்க வருகிறார்கள், அவர்களுக்கு தேவை என்று கேட்டுக் கொண்டால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள் சமூகநலத்துறைக்கு பரிந்துரை செய்தால், சமுகநலத்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் காலத்தில் இன்னலுற்ற மக்களின் துயர் தீர்க்க சிறப்பான திட்டங்களைத் தீட்டி அவர்களுக்குச் சீர்மிகு நல்வாழ்வினை அளிக்கின்ற இன்றைய சூழ்நிலையில் மகள், மகன் போன்றவர்கள் கவனிக்காததால் வயோதிக நிலையில் ஆதரவின்றி வாழ்பவர்களுக்கு ஆதரவுக்கரம் தரும் வகையில் பணம் இருந்தும் மனம் இருந்தும் மகள், மகன் வெளிநாடுகளில் இருப்பதால்—அங்கே செல்ல இயலாத நிலையில் இங்கே தனித்து தவித்து வாழும் முதியவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட கட்டண முதியோர் இல்லம் அமைக்க முயற்சிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் இவர்களுக்கு எந்தத் திட்டங்களைச் செய்தாலும். அந்தத் திட்டங்கள் முழுமையாக அவர்களுக்கு இலவசமாக செய்யப்படவேண்டும் என்று சொல்கின்ற ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே புரட்சித் தலைவி ஒருவர் தான். ஆகவே கட்டணம் வாங்கிக்கொண்டு இந்த சேவையை செய்வதற்கு அரசு விரும்பாது. அரசு விரும்பவில்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு, கட்டணம் இல்லாமலேயே அவர்களைச் சேர்த்துக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். வசதி படைத்தவர்கள், ஏழைகள் என்ற பாகுபாடு இல்லாமல் அவர்களைச் சேர்ப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் இருந்தால், சமூகநலத்துறைக்குப் பரிந்துரை செய்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.